பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 10 2024 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்யாவில் உஸ்பெகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர்களுடன் இருதரப்புப் பேச்சு நடத்தினார்.
2. எரிசக்தித் துறையின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்காற்றும் என்று பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.
3. நான்காவது தொழில்புரட்சிக்கு ஏற்ப, திறன் அடிப்படையிலான கல்விக்கு புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரப் பிரதான் தெரிவித்துள்ளார்.
4. வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள டானா புயலையொட்டி, ஒடிசாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
5. ஐநா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
6. வளரும் அணிகளுக்கான ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் ஓமனை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்யாவில் உஸ்பெகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர்களுடன் பேச்சு நடத்தினார்.

ரஷ்யா சென்ற அவர், உச்சிமாநாட்டுக்கு இடையே ஐக்கிய அரபு எமிரேட்சின் அதிபர் திரு. ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யான் உடன் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து பேச்சு நடத்தினார்.

இதேபோல் உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. ஷவுகத் மிர்ஸியோயேவ் உடனும் பிரதமர் ஆலோசனை மேற்கொண்டார்.

வர்த்தகம் மற்றும் கலாச்சார தொடர்புகளை அதிகரிப்பது குறித்து உஸ்பெகிஸ்தான் அதிபருடன் தாம் பேச்சு நடத்தியதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்

எகிப்து அதிபர் திரு. அப்தல் ஃபடா எல்சிசி-யையும் அவர் ரஷ்யாவின் கஸான் நகரில் சந்தித்தார்.

இந்நிலையில் பிரிக்ஸ் மாநாட்டுக்காக ரஷ்யாவுக்கு மேற்கொண்ட பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு பிரதமர் நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

<<<<>>>>

எரிசக்தித் துறையின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்காற்றும் என்று பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் எரிசக்தி துறை மேம்பாட்டில் செயற்கை நுண்ணறிவின் பங்கு என்பது தொடர்பான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது இத்துறையில் திறன்களை அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் பாதுகாப்பு, தரவுகள் மேலாண்மையின் தரம் உள்ளிட்டவை இதன்மூலம் அதிகரிக்கும் என்று திரு. ஹர்தீப்சிங் பூரி கூறினார்.

<<<<>>>>

நான்காவது தொழில்புரட்சிக்கு ஏற்ப, திறன் அடிப்படையிலான கல்விக்கு புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரப் பிரதான் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள அவர், மெல்போர்னில் நடைபெற்ற ஆஸ்திரேலிய சர்வதேச கல்வி மாநாட்டில் நேற்று உரையாற்றினார்.

இந்திய – ஆஸ்திரேலிய கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு தற்போது அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய தேசிய கல்விக் கொள்கை, திறன் மேம்பாட்டை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது என்று திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பேசிய ஆஸ்திரேலிய கல்வியமைச்சர் திரு. **Jason Clare,** இந்தியாவில் கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இதன்மூலம் 2035ஆம் ஆண்டுக்குள் உலகின் நான்கு பட்டதாரிகளில் ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவராக இருப்பார் என்று ஆய்வுகள் தெரிவிப்பதாக திரு. **Jason Clare** குறிப்பிட்டார்.

<<<<>>>>

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் சவுதி அரேபிய இளவரசர் திரு முகமது பின் சல்மானை நேற்று சந்தித்துப் பேசினார்.

காசா மற்றும் லெபனானில் நடந்து வரும் மோதல்கள் குறித்து அவர்கள் இருவரும் விவாதித்தனர்.

திரு ஆண்டனி பிளிங்கன் சவுதி வெளியுறவு அமைச்சர் திரு பைசல் பின் ஃபர்ஹானுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

காசா மோதல் தொடங்கிய பின் மத்திய கிழக்கு நாடுகளுக்கு திரு ஆண்டனி பிளிங்கன் பதினோராவது முறையாக பயணம் மேற்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ஜெர்மனி பிரதமர் ஓலாஃப் ஷோல்ஸ், மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இன்று மாலை இந்தியா வருகிறார்.

நாளை தில்லியில் நடைபெறும் 7வது இந்திய – ஜெர்மன் அரசுகளின் ஆலோசனைகளுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து அவர் பங்கேற்கிறார்.

பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

ஜெர்மன் வர்த்தகத் துறை நடத்தும் 18வது ஆசிய பசிபிக் மாநாட்டிலும் இரு தலைவர்களும் நாளை பங்கேற்கின்றனர்.

இந்தியா, ஜெர்மனி மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த 650 முன்னணி வணிகத் துறைப் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

தமது இந்தியப் பயணத்தின் போது ஜெர்மன் பிரதமர், கோவாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் மக்கள் மருந்தகங்களில் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக ரசாயனம் மற்றும் உரத்துறை தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் இம்மாதம் 20ஆம் தேதி வரை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இந்த மருந்தகங்களில் விற்பனை நடைபெற்றுள்ளதாக அந்த அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைவிட இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே இந்த விற்பனை எட்டப்பட்டுள்ளது என அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 14 ஆயிரம் மக்கள் மருந்தக மையங்கள் உள்ளன என்றும், இவை தரமான மருந்துகளை குறைந்த விலையில் வழங்கி வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மருந்தகங்களில் 2 ஆயிரத்து 47 வகையான மருந்துகளும் 300 அறுவை சிகிச்சை சாதனங்களும் விற்பனை செய்யப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள டானா புயல் தீவிர புயலாக வலுவடைந்துள்ளது.

இந்தப் புயல் ஒடிசா மாநிலம் பிதர்கனிகாவுக்கும் - தமராவுக்கும் இடையே இன்று இரவு அல்லது நாளை அதிகாலை கரையைக் கடக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் முழுமையாக கரையைக் கடக்க ஐந்து முதல் ஆறு மணி நேரம் ஆகும் என வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு மிருத்யுஞ்சய் மகோபாத்ரா தில்லியில் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதன் காரணமாக கனமழையுடன் மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என அவர் கூறினார்.

இந்நிலையில் டானா புயலை எதிர்கொள்ள ஒடிசாவில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கேந்திரபாரா, பாலாசுர், பத்ரக் ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்படக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இப்பகுதிகளிலும் மேலும் 11 மாவட்டங்களிலும் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மான்ஜி தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் புவனேஸ்வரில் நேற்று நடைபெற்றது.

பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்கள் இன்று காலை 11 மணிக்குள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்படுவார்கள் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 6 ஆயிரம் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஒடிசா அரசு கூறியுள்ளது.

மேற்கு வங்க மாநிலத்திலும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டானா புயல் காரணமாக புவனேஸ்வர் மற்றும் கொல்கத்தா விமான நிலையங்களில் விமான சேவைகள் இன்று மாலை முதல் நாளை காலை வரை நிறுத்தி வைக்கப்பட்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ரயில் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

நாட்டின் சில பகுதிகளில் டிஏபி உரப் பற்றாக்குறை நிலவுவதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரசாயனம் மற்றும் உரத் துறை வெளியிட்டுள்ள விளக்கத்தில், கோவிட் காலத்திலிருந்து டிஏபி-யின் அதிகபட்ச சில்லறை விலை, 50 கிலோ மூட்டைக்கு, ஆயிரத்து 350 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டு தொடர்ந்து அது பராமரிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

டிஏபி மீதான மானியம் குறைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக விவசாயிகளின் நலனுக்காக, 2024ஆம் ஆண்டிற்கான மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது என அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தில் உரங்கள் கிடைப்பதை அதிகரிக்க உரத்துறை தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் வரும் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என சென்னை ஐ.சி.எஃப் பொதுமேலாளர் திரு சுப்பாராவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த வகை ரயில் பெட்டி தயாரிப்புப் பணிகள் கடந்த மாதத்தில் முடிவடைந்ததாகவும், இது பலகட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

முழுமையான சோதனைக்குப்பின் இந்த ரயில், ரயில்வே வாரியத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் இதனை எந்த வழித்தடத்தில் இயக்குவது என்பது குறித்து ரயில்வே வாரியம் முடிவு செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோல, தூங்கும் வசதி கொண்ட மேலும் 50 வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்கப்பட உள்ளதாகவும், முதல்கட்டமாக 10 ரயில்கள் தயாரிக்கப்படும் என்றும் திரு சுப்பாராவ் கூறினார்.

<<<<>>>>

ஐநா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1945ஆம் ஆண்டு இதே நாளில் ஐ.நா. தோற்றுவிக்கப்பட்டது.

இதனைக் குறிக்கும் வகையில் 1948ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் தேதி ஐ.நா. தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

சாணக்யா சர்வதேச ராணுவ கருத்தரங்கை, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

ராணுவத்தின் பசுமை முன்முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளையும் அமைச்சர் தொடங்கி வைக்கவுள்ளார்.

வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை என்ற கருப்பொருளில் அமைச்சர் உரையாற்றவுள்ளார்.

ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதியும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இரண்டு நாள் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள், பாதுகாப்புத் துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

<<<<>>>>

வளரும் அணிகளுக்கான ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் ஓமனை வென்றது.

ஓமனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த ஓமன், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 140 ரன் எடுத்தது.

141 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 15 புள்ளி 2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

சென்னை நேரு விளையாட்டரங்கில் இரவு மணி 7.30க்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<>>>>

இந்தியா – ஜெர்மனி அணிகளுக்கு இடையேயான 2வது ஹாக்கிப் போட்டி புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**